RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# வரலாற்று ஆய்வு நோக்கில் ராஜம் கிருஷ்ணனின் பாதையில் பதிந்த அடிகள்

**இரா. விமலாதேவி** [அ, *]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத்துறைசெல்லம்மாள் மகளிர் கல்லூரி கிண்டி, சென்னை-32, இந்தியா,

# Footsteps in the path of Rajam Krishnan from the perspective of historical research

**R. Vimaladevi** [a, *]

[a] PG Tamil Studies and Advanced Studies, Chellammal Women's College Guindy, Chennai - 32, India

*Corresponding Author: katturai100@gmail.com

Received: 12-12-2025
Revised: 24-02-2026
Accepted: 11-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

Tamil literature, which was created in verse from folk songs to epics, began to develop into prose at the beginning of the 19th century due to the influence of Western literary development. Events occurring in life found a place in literature. In the era we live in, among the events occurring around us in political, social, and economic spheres, those events which create a major impact on society become historical news. When these events find a place in novels, those novels are considered to be set in a historical background. As examples of this, one can mention Indira Parthasarathy's Suthanthira Bhoomi, which speaks of the Bangladesh War and internal political events; Jayakanthan's Jaya Jaya Sankara and Ponneelan's Puthiya Dharisanangal, which convey information about the Emergency. S. Samuthiram's novel Koottam, which narrates the Babri Masjid demolition event; and the novel Vilai Nilam written by Imayavan and Indiraparthasarathy's Kuruthipunal, which have as their core theme the farmers' struggle demanding an increase in harvest wages and the subsequent event of burning the farming families along with their huts, are based on events that happened in society. In that regard, Rajam Krishnan is a unique feminist writer. She chooses environments that affect society as the core of her novels and creates literary works with authenticity by going to the locations of those environments to collect information through field research. In this way, the objective of this research is to examine how Rajam Krishnan's novel Pathaiyil Pathintha Adigal (Footprints on the Path) records the social, economic, political, and cultural changes of twentieth-century Tamil Nadu and serves as a social research work with the nature of a historical document.

**Keywords:** Midwifery, Land Cultivation, Urban Development, Landed Aristocracy

## முன்னுரை

தேசிய வரலாற்றில் எந்த ஒரு மக்கள் இயக்கமும் பெண்கள் சம்பந்தப்படாததாக இருக்க முடியாது. மக்கள் தொகையில் ஆண்களுக்கு நிகராக ஏறக்குறைய இருக்கும் பெண்கள் பங்கு பெறாத எந்த மக்கள் இயக்கமும் வெற்றி பெற முடியாது. சமுதாயத்தின் அச்சாணியாக நின்று சாதக பாதக அம்சங்களைத் தாங்குபவர்கள் பெண்கள். ஆனால் வரலாற்றில் பெண்களின் முக்கியத்துவம் ஒருபோதும் பதிவாவதில்லை.

சமய கொடுமைகளுக்கும் சமூக புறக்கணிப்புக்கும் உள்ளாகி அரசியல் கட்சிகளின் ஆதிக்கங்களை எதிர்த்து தாழ்த்தப்பட்ட பண்ணை அடிமைகளுக்கும் உழைக்கும் மக்களுக்கும் நீதி கேட்டுப்போராடிய மணலூர் மணியம்மையார் இடது சாரி இயக்கத்தில் தீவிரமாகச் செயல்பட்டவர். கீழ் தஞ்சை பகுதியில் நில பிரபுத்துவ கொடுமைகளை எதிர்த்து மக்களை ஒன்றிணைத்து போராடத் தூண்டி

உழைப்புக்கு உரிய கூலியை பெற்றுக் கொடுத்து மக்கள் மனதில் வாழ்ந்தவர். அவரின் வாழ்க்கை வரலாற்றை பதிவு செய்யும் முயற்சியிலேயே இந் நாவல் அமைந்துள்ளது.

## வரலாற்றியல் அணுகுமுறை

இலக்கியம் பொதுவெளியிலிருந்து தோன்றுவதில்லை. குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட பின்னணியில் குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த படைப்பாளிகளினால் படைக்கப்படுகின்றது. இலக்கியம் வரலாற்றின் காரணமாக அமைவதோடு அதன் காரியமாகவும் அமையக்கூடியது இலக்கியத்தை வரலாற்று உந்து சக்திகளின் ஒளியில் தரிசிக்கும் பார்வையே வரலாற்றியல் அணுகுமுறையாகும். (நடராசன் தி.சு,திறனாய்வு கலை)

## சமூகக் கட்டமைப்பு-பெண்ணடிமை மீட்பு

பெண்ணியம் என்ற கோட்பாடானது ஆண்கள் எந்த அளவு சமூக அமைப்பிலும் பொருளாதாரத்திலும் அரசியலிலும் ஈடுபட்டு உரிமை கொண்டாடுகிறார்களோ அந்த அளவிற்குப் பெண்களும் ஈடுபடும் சமூக அமைப்பை உருவாக்கித் தருவது(பெண்ணியம் இரா. பிரேமா)

இந்த நாவல் விடுதலைக்கு முந்தைய காலகட்டத்தில் சமூகத்தில் பெண்களுக்கு ஏற்பட்டிருந்த நிலை, குடும்ப அடக்குமுறை, பிராமண பெண்கள் கணவனை இழந்தால் மொட்டை அடித்து வெள்ளை சேலை உடுத்து விருப்பமான உணவை உண்ண முடியாமல் பலவித சாஸ்திர சம்பிரதாயங்களால் அவதிப்பட்ட நிலையை பதிவு செய்கிறது .

கைம்பெண்கள் செருப்பு போட்டு நடக்கக்கூடாது என்ற சட்ட திட்டமும் கடுமையாக பின்பற்றப்பட்டது."இந்த பிராமண ஜாதில பொம்மணாட்டி செருப்புப் போட்டுக்கப்படாது அதுவும் வீணாப் போனவா போட்டுக்கலாமாம்மா?" (பாதையில் பதிந்த அடிகள்- ராஜம் கிருஷ்ணன்) என்ற கூற்றில் இருந்து பெண்களுக்கு செருப்பு போட அனுமதி இல்லை என்பதும் விதவைகளுக்கு அது முற்றிலும் விலக்கப்பட்டது என்பது தெரிய வருகிறது.

பெண் என்பவள் ஒரு ஆணின் சொத்து .சுகங்கள், பதவி, போகங்கள் ஆகிய செல்வாக்குகளில் அடங்கிய அவனுடைய சுகஜீவனத்தை மேன்மைப்படுத்தும் ஒரு சின்னம். புருஷன் போகும்போது இவர்கள் தாலி, தலைமுடி, வண்ண ஆடைகள், வைர, தங்க ஆபரணங்கள், மஞ்சள், குங்குமம் என்ற வரிசைகளை மட்டும் கொண்டு போகவில்லை. இந்த சில்லறை சாத்தியங்களிலும் மாட்டி விடுகிறான்.

காப்பியை புருஷனை இழந்த இவள் குடிக்கலாம் .ஆனால் சொட்டுண்டு டிக்காஷன் கூட விடாமல் பாலை குடிக்கக்கூடாது. இதுபோன்ற பல சில்லறை சாத்திரங்கள் மணியை பொறுமை இழக்கச்செய்தது .இந்த சாஸ்திரங்களை எந்த ரிஷி முனிவர்கள் எழுதி வைத்தார்கள். (ராஜம் கிருஷ்ணன், 1991) இவற்றை மாற்ற விரும்பிய மணியம்மையார்

கண்கள் இரண்டில் ஒன்றை குத்தி

காட்சி கெடுத்திடலாமோ

பெண்கள் அறிவை வளர்த்தால்- வையம்

பேதைமை யற்றிடுங் காணீர் (மெய்யப்பன் ச {ப.ஆ}, 2000)

என்ற பாரதியின் வரிகளுக்கு ஏற்பவும் பெண்கள் முன்னேற்றம் பற்றிய பெரியாரின் கருத்துக்களுக்கு ஏற்பவும் முடியை வளர்த்து கிராப் வைத்துக் கொண்டார். சேலையை துறந்து வேட்டி ஜிப்பாவுக்கு மாறினார். பெண்மையின் உடை உள்ளிட்ட பல்வேறு குறியீட்டு அம்சங்களை அடிமைத்தனத்தின் அடையாளம் என கருதிய அவர் அவற்றை துறந்து கிருதா வைத்துக் கொண்டு ஆண்களைப் போல வேட்டி சட்டை அணிந்து கொண்டார். தற்காப்புக்கென சிலம்பமும் கற்றுத் தேர்ந்தார். சைக்கிள் கற்றுக்கொண்டு அனைத்து இடங்களுக்கும் சைக்கிளிலேயே பயணித்தார்.

பெண்களை சமூக கட்டுப்பாட்டிலும் அதிகாரச் சட்டத்தின் அடிப்படையிலும் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்று ஆணாதிக்கச்சக்தியின்நிலைப்பாடு தெளிவாகிறது. கட்டுப்பாடுகளை உடைத்து பெண்கள் தைரியத்துடன் வெளிவர வேண்டியதன் அவசியம் உணர்த்தப்படுகிறது.

## சமகால அரசியல் பின்னணி

1940 களின் பிற்பகுதி மற்றும்19 50களில் இந்தியா பல்வேறு பிரச்சனைகளையும் சிந்தனைகளையும் சந்தித்த காலப்பகுதியாகும். ரஷ்ய புரட்சிக்குப் பின்னர் பொதுவுடமை சிந்தனைகள் உலகம் முழுதும் மிக வேகமாகப்பரவின அவ்வகையில் தமிழகப்படைப்பாளர்களும் சிந்தனைகளுக்கு

முக்கியத்துவம் கொடுக்க துவங்கினர். அதே வேளையில் மகாத்மா காந்தியின் புகழ் பரவியதில் மகாத்மா காந்தியின் சிந்தனைகள் காந்தியம் என்ற கோட்பாடாக உருவாகியது (கிருஷ்ணன் மணியம் இக்காலத் தமிழ் நாவல்களின் செல்நெறிகள்) ஆகஸ்ட் 8, 9 குவாலியர் தோலா மைதானத்தில் கூடிய மாநாட்டில் வெள்ளையனே வெளியேறு என்ற முழக்கம் நாட்டின் எல்லா திசைகளிலும் எதிரொலிக்கிறது.

செய் அல்லது செத்துமடி என இளைஞர்கள் போராட்டத்தில் குதிக்கின்றனர். காந்திஜியும் ஏனைய தலைவர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்றனர். இந்திய விடுதலைப் போராட்டம் உச்சத்தை அடைகிறது என அக்காலகட்ட அரசியல் சூழ்நிலையை பதிவு செய்துள்ளார். ஆகஸ்ட் 1947 15ஆம் நாள் அலுவலகத்தில் தேசியக் கொடியும் செங்கொடியில் ஏற்றப்பட்டது. மைக்கில் ஆடுவோமே பள்ளு பாடுவோமே என்ற பட்டம்மாளின் குரலால் முழங்குகிறது. கருப்பு சட்டை அணி ஒன்று மௌன ஊர்வலம் புறப்பட்டு இருக்கிறது. தேசம் துண்டாடப்பட்டிருக்கிறது. இந்துக்களால் முஸ்லிம்களும் முஸ்லிம்களால் இந்துக்களும் கொல்லப்படுகிறார்கள். காந்திஜி இந்தக்கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளவில்லை. (ராஜம் கிருஷ்ணன், 1991) தோழர்களே நமக்கு இது நன்னாள். அன்னியர் பிடியிலிருந்து அகன்றது முதல் அரசியல் விடுதலை. நம் நாடு சுதந்திரம் அடைந்த நன்னாளில் திராவிடர் கழகத்தினர்,காங்கிரஸ் கட்சியினர், பொதுவுடமை இயக்கத்தினர் ஆகிய மூன்று கட்சிகளின் மாறுபட்ட மனநிலைகளை பதிவு செய்தலின் வழி அக்கால வரலாற்றை நம் கண்முன் காட்சிப்படுத்தி உள்ளார்.காந்தி செத்து போயிட்டாரு அம்மா ஒரு ஆள் குண்டு போட்டு கொன்னுட்டான் நமது தேசப்பிதா நமக்கு சுதந்திரம் வாங்கி தந்த மகாத்மா காந்தி பாதகனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.(ராஜம் கிருஷ்ணன்,1991 )மகாத்மா காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்ட அன்று கண்ணீர் ததும்பும் விழிகளுடன் இருந்த மக்களின் மனநிலையையும் காட்சிப்படுத்தியுள்ளார்

## வர்க்க பேதமும் பொருளாதாரச் சுரண்டலும்

உழைக்கும் ஏழை விவசாய தொழிலாளர்களுக்கு உரிய கூலி கொடுக்காமல் ஏமாற்றி வஞ்சித்து அவர்களை உணவுக்கே வழி இல்லாமல் வைத்திருப்பதன் வாயிலாக அதிகார வர்க்கம் சாதிய அடிப்படையிலும் அவர்கள் உழைப்பை உறிஞ்சிக் கொழுக்கிறது

கரவெளி நடவுனா இரு பக்கமாக பிரிந்து நடவு நடும் பெண்கள் யார் முதலில் வருவது என பேசி நிமிராமல் நடவு செய்வது. இதில் ஏசண்டையாக்கு வேண்டப்பட்ட பொம்பள நின்னப்பக்கம் தான் முதலில் வந்தது என தவறாகச்சொல்ல ஏற்பட்ட வாக்குவாதத்தில் உனக்கு கூலி கிடையாது வேலையும் இல்ல போனு விரட்டிட்டாரு அதனால கஞ்சி இல்லாம அம்புட்டு பேருக்கும் வாயில மண்ணு (ராஜம் கிருஷ்ணன், 1991) தொழிலாளர்கள் நடுவாளால் வஞ்சிக்கப்படுவது தெரிந்து மணி அம்மையார் கொதிப்படைகிறார். இந்நிலையை மாற்ற நடுவாள் முறையை ஒழித்து தானே பண்ணையை மேற்பார்வை செய்ய ஆரம்பித்தார்.

## ஆதிக்க வர்க்கத்தின் எதிர்வினை

சமூகத்தில் மாற்றம் ஏற்பட்டு விட்டால் அதிகார வர்க்கத்தின் மேலாண்மை தன்மை குறையும் எனப்பதறிய அவர்கள் அந்த ஈனச்சாதிகளை உன்னால் மேய்க்க முடியுமா தவிர ஊர்க்கட்டு நியாயம் ஒண்ணு இருக்கு இது காலம் காலமா வந்திருக்கிற முறை நாம நேரடியாக பண்ணைக்குப் போய் காரியஸ்தன் வேலை பண்ண முடியுமா (ராஜம் கிருஷ்ணன், 1991) என மணியம்மையாரிடம் சமரசம் பேச முற்படுகின்றன

கூலித் தொழிலாளிகளின் இன்னல்களைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் தங்களின் அதிகாரம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவதுடன் சாதிய அடிப்படையிலான வேலை பங்கீடு, வர்க்க வேறுபாடுகள், சமூக அந்தஸ்து என அக்கால கட்ட சமூக அமைப்பை வரலாற்றுச் சான்றுகளாக பாதையில் பதிந்த அடிகள் வழி ராஜம் கிருஷ்ணன் பதிவு செய்கிறார்

## முடிவுரை

ஏடறிந்த வரலாறு எல்லாம் பெண்கள் இருட்டடிப்பு செய்யப்பட்ட வரலாறு தான் அவ்வகையில் கம்யூனிஸ்ட் இயக்க முன்னோடிகளில் ஒருவரான மணலூர் மணியம்மையார் வரலாறு மறைக்கப்பட்ட மறுக்கப்பட்ட மறக்கப்பட்ட ஒன்றாகும். அதனை பாதையில் பதிந்த அடிகள் நாவல் வழி வெளிக் கொணர்வதுடன் விடுதலைக்கு முந்தைய பிந்தைய காலகட்டத்தை சமூகம், அரசியல், தொழிலாளர், பெண்கள் வரலாற்றை நாவல் வழி பதிவு செய்த மிகச்சிறந்த வரலாற்று ஆவணமாக பாதையில் பதிந்த அடிகள் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

## References

Bharathiyar, (2000) Bharathiyar Poems, Thendral Nilayam, Chidambaram -608001, Tamil Nadu, India.

Krishnan Manian, (2001) Trends in Contemporary Tamil Novels, Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia.

Natarasan, The S., (1996), Criticism, New Century Book House, Chennai-600088, Tamil Nadu, India.

Prema, R, (2000) Feminism, Pari Book Farm, Chennai-600104, Tamil Nadu, India.

Rajam Krishnan, (1991) Footprints on the Path, Kalachuvadu Publishing House. Nagercoil- 629001, Tamil Nadu, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License